# Field Work Centre
# தவணைப் பரீட்சை, யூலை - 2015
# Term Examination, July - 2015

| தரம் :- 12 (2016) | நாடகமும் அரங்கியலும் | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- ❖ சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

## பகுதி – I

1) நாடகம் வாழ்க்கையின் பிரதிபலிப்பாகும் பழக்க வழக்கங்களைக் காட்டும் நிலைக்கண்ணாடியாகும் எனும் கருத்துக் கூறியவர்
1) அலடைஸ்நிக்கொல் 2) அபிநவகுப்தர் 3) அரிஸ்ரோட்டில்
4) பரத முனிவர் 5) பேர்னாட்ஷா (……)

2) புதிதளித்தலுக்கு மிக அவசியமானது
1) குரல் 2) ஆர்வம் 3) கற்பனை
4) முகபாவம் 5) தன்னிறைவு (……)

3) பின்வருவனவற்றில் தூயநடனத்தைக் குறிப்பது
1) பரதம் 2) நிருத்த 3) நிருத்திய
4) நாட்டிய 5) பாவபதம் (……)

4) லோகதர்மி எனப்படுவது
1) குறியீட்டுப் பண்பு 2) பெருங்காட்சிப் பண்பு 3) அசாதாரண அலங்காரம்
4) மிகைநடிப்பு 5) இயல்பான சித்தரிப்பு (……)

5) சிறந்த சமஸ்கிருத நாடகம் கொண்டிருக்கும் வளர்ச்சிப்படிகள்
1) ஒன்று 2) இரண்டு 3) மூன்று
4) நான்கு 5) ஐந்து (……)

6) நாட்டிய சாஸ்திரம் கூறும் சாத்வீக அபிநயத்தில் ''பிராய'' என்பது
1) வியர்த்தல் 2) மயக்கம் 3) குரல்மாற்றம்
4) கண்ணீர் சொரிதல் 5) மயிர்கூச்செறிதல் (……)

7) பாடுதல் முக்கியம் பெறும் அரங்க வடிவம்
1) ஒப்பேரா 2) பலே 3) ஒடிசி
4) கபுக்கி 5) கதக் (……)

8) ''பாண்டவர் வனவாசம்'' சடங்கு பிரபல்யமடைந்த பிரதேசம்
1) முல்லைத்தீவு 2) வன்னி 3) மன்னார்
4) மட்டக்களப்பு 5) யாழ்ப்பாணம் (……)

9) வைகாசி மாதத்தில் கண்ணகி அம்மன் கோவிலில் இடம்பெறும் சடங்கு
1) குளுர்த்திச் சடங்கு 2) பாண்டவர் வனவாசம் 3) வேட்டைத் திருவிழா
4) மாம்பழத் திருவிழா 5) வாடை வெட்டு விழா (……)

10) குழந்தை வரம் சுகப்பிரசவம் வேண்டி செய்யப்படும் சிங்களச் சடங்கு
1) கொகொம்பஹுங்காரிய 2) தகட்ட சன்னிய 3) தொவில்
4) மகாபிரித் 5) றட்டயகும (……)

11) ''தானாயம்பல'' எனுமிடத்தில் வேடமுகம் அணியப்பட்டு செய்யப்படும் சிங்கள நாட்டார் நாடகம்
1) தொவில் 2) ஒட்டிகுமார 3) செக்கரி
4) றட்டயகும 5) கோலம் (……)

12) ‘நாடகம்’ நாடக வடிவத்தின் ஆற்றுகை செய்யப்படும் கதையினை நகர்த்திச் செல்பவர்
1) பெத்தேகுரு 2) புலசந்தோர் 3) கட்டியகாரன்
4) வெசமுனி 5) கூத்துரைஞன் (……)

13) கவிதையியல் எனும் நூலின் ஆசிரியர்
1) சோபோ.ஃகிளிஸ் 2) இயூரிப்பிடிங் 3) அரிஸ்ரோட்டில்
4) இஸ்ரனிஸ்லவஸ்கி 5) ஈஸ்கலஸ் (……)

14) நாடகம் ஒன்றில் குரல், பாடல், சொல்லாடல் மூலம் கருத்தைப் புலப்படுத்துவது
1) ஆங்கிகம் 2) சாத்விகம் 3) வாச்சிகம்
4) ஆஹார்யம் 5) ஸ்தாயிபாவம் (……)

15) அரிஸ்ரோட்டில் குறிப்பிடும் அரங்க மும்மைகளாவன
1) காலம், இடம், இயக்கம் 2) காலம், வெளி, நடிப்பு 3) நடிப்பு, காட்சி, இசை
4) காலம், இயக்கம், பாத்திரம் 5) வெளி, ஒளி, அசைவு (……)

16) உலக அரங்கின் தொட்டில் என அழைக்கப்படும் அரங்க மரபு
1) இத்தாலிய அரங்கு 2) உரோம அரங்கு 3) சீன அரங்கு
4) இங்கிலாந்து அரங்கு 5) கிரேக்க அரங்கு (……)

17) கிரேக்க அவலச்சுவையினால் வெளிக்கொணரப்படும் உணர்ச்சிகள்
1) பயமும், கழிவிரக்கமும் 2) பயமும், அச்சமும் 3) பரிவும், பாவமும்
4) சாந்தம், கோபம் 5) பரிவும், இரக்கமும் (……)

18) சமஸ்கிருத நாடகத்தில் பரதர் பாத்திரங்களை எத்தனை வகையாகப் பாகுபடுத்திக் காட்டுகிறார்
1) ஒன்று 2) இரண்டு 3) மூன்று (……)
4) நான்கு 5) ஐந்து

19) முதலாவது சிங்கள ‘நாடகம்’ ஆகக் கருதப்படுவது
1) மனமே 2) சிங்கபாகு 3) அஹலபொல
4) நூர்த்தி 5) நட்டயகும (……)

20) உடக்குபாஸ் நாடகத்தில் மக்கள் வேடம் தாங்கும் பாத்திரம்
1) இயேசு 2) பிலாத்து 3) போர்வீரர்
4) பரிசேயர் 5) அன்னாஸ்கைப்பாஸ் (……)

21) குற்றாலக் குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவர்
1) சிங்கன் 2) வசந்தவல்லி 3) சிங்கி
4) குற்றாலீஸ்வரர் 5) திரிகூடஇராசப்பகவிராயர் (……)

22) அபசுரம் நாடகத்தில் பங்குபற்றாத பாத்திரம்
1) அருளர் 2) தியாகர் 3) மெய்யர்
4) பொதுவர் 5) சிவாயர் (……)

23) சகுந்தல நாடகத்தில் வரும் மாதவையன் எனும் பாத்திரம்
1) முனிகுமாரன் 2) சேவகன் 3) செம்படவன்
4) நாயகனின் தோழன் 5) போர்வீரன் (……)

24) அன்ரிக்கனி நாடகத்தில் இல்லாத பாத்திரம்
1) கிரயோன் 2) தெஸ்ரீசியஸ் 3) இயூரிடிசி
4) ஜெகஸ்ரா 5) இசுமனி

25) அபசுரம் நாடகத்தில் வரும் சிவாயர் எனும் பாத்திரம்
1) நாத்தீகன் 2) மதவாதி 3) பித்தலாட்டக்காரன்
4) படித்தவர் 5) ஊரைஏமாற்றுபவர் (……)

26) நாடக எழுத்துரு ஒன்றினை முழுமையாக மதிப்பீடு செய்து விளங்கிக் கொள்பவர்
1) தயாரிப்பாளர் 2) நெறியாளர் 3) நினைவூட்டுனர்
4) இசையமைப்பாளர் 5) மேடைமுகாமையாளர் (……)

27) நாடக தயாரிப்பாளனின் பணிகளுள் அடங்காதது
1) எழுத்துரு தெரிவு 2) நெறியாளர் தெரிவு 3) நடிகர்களை ஒழுங்கு செய்தல்
4) நாடகத்தைப் பழகுதல் 5) நிதி அனுசரனை வழங்குதல் (……)

28) மிகப்பழைய காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஒப்பனைப் பொருள்
1) பான்கேக் 2) கஸ்தூரி மஞ்சள் 3) களிம்பு
4) பங்பவுடர் 5) அரிதாரம் (……)

29) நடிகனை வழி நடத்துபவர்
1) இசையமைப்பாளர் 2) ஒளிவிதானிப்பாளர் 3) நெறியாளர்
4) காட்சிவிதானிப்பாளர் 5) வேட உடை ஒப்பனையாளர் (……)

30) நடிகரின் பேச்சுத்திறனை வளர்க்க உதவும் பயிற்சி
1) உடல் தளர்வுப் பயிற்சி 2) அசைவுப் பயிற்சி 3) குரல் பயிற்சி
4) அவதானப் பயிற்சி 5) கிரகித்தல் பயிற்சி (……)

31) நடிப்புக்குரிய முறைமைக் கோட்பாட்டினை முன்வைத்தவர்
1) மேயர் ஹோல்ட் 2) ஸ்ரனிஸ்லவஸ்கி 3) பிரக்ட்
4) யூஜின் அயனெஸ்கோ 5) அகஸ்தாபோல் (……)


32) யாழ்ப்பாணத்துப் பேச்சு மொழியை நாடகத்தில் முதலில் கையாண்டவர்
1) கா. சிவதம்பி 2) க. சிதம்பரநாதன் 3) சு. வித்தியானந்தன்
4) க. கணபதிப்பிள்ளை 5) க. சொர்ணலிங்கம் (……)


33) ஈழத்து தமிழ் சிறுவர் அரங்க முன்னோடியாக கொள்ளப்படுபவர்
1) ம. சண்முகலிங்கம் 2) சி. மௌனகுரு 3) நா. சுந்தரலிங்கம்
4) சு. வித்தியானந்தன் 5) கோகிலாமகேந்திரன் (……)

34) விவாகப் பேச்சு (The proposal) எனும் நாடகத்தின் மூல நாடகாசிரியர்
1) இப்சன் 2) செக்கொவ் 3) ஷேக்ஸ்பியர்
4) பிறெச்ட் 5) மேயர் ஹோல்ட் (……)

35) உலகளாவிய ரீதியில் தமிழில் வெளிவரும் அரங்கு தொடர்பான சஞ்சிகை
1) ஆற்றுகை 2) அரங்கம் 3) கட்டியம்
4) கூத்தரங்கம் 5) கலைமுகம் (……)

36) பரதர் கூறும் பிரதான கதைப்பின்னல் ஐந்தும் முறையே
1) ஆரம்பம், முயற்சி, பலாகம, பிராய்தியாய, நியதாப்தி
2) ஆரம்பம், முயற்சி, பிராப்தியாய, நியதாப்தி, பலாகம
3) ஆரம்பம், முயற்சி, நியதாப்பி, பலாகம, பிராப்பியாய
4) ஆரம்பம், முயற்சி, பலாகம, நியதாப்தி, பிராப்பியாய
5) ஆரம்பம், முயற்சி, பிராப்தியாய, பலாகம, நியதாப்தி (……)


(அ)


(ஆ)


(இ)


(ஈ)

37) படம் (அ) இல் காணப்படுபவர்
1) சோபோக்லீஸ் 2) மெனான்டர் 3) யூரிப்பிடிஸ்
4) அரிஸ்ரோட்டில் 5) அரிஸ்ரோப்பன்ஸ் (……)

38) படம் (ஆ) இல் காணப்படும் ஈழத்தவர்
1) அ. தாசீசியஸ் 2) இ. முருகையன் 3) நா. சுந்தரலிங்கம்
4) இ. சிவானந்தன் 5) சுவைஹர் ஹமீத் (……)

39) படம் (இ) இல் காணப்படும் நாடகவியலாளர்
1) சூத்திரகர் 2) ஸ்ரீ ஹர்சர்3) பாசர்
4) காளிதாசர் 5) கதாஸ்கர் (……)

40) படம் (ஈ) இல் காணப்படும நோயைக் குறிக்கும் வேடமுகம்
1) அழுக்குசன்னி 2) ஊமைச்சன்னி 3) மூடச்சன்னி
4) விகர்ச் சன்னி 5) செவிட்டுச்சன்னி (……)

## பகுதி – II

❖ **பகுதி II இல் பிரிவு A யிலிருந்து இரண்டு வினாக்களுக்கும் பிரிவு B யிலிருந்து இரண்டு வினாக்களுக்குமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பிரிவு A

**1)**
1) அன்ரிக்கனி நாடகத்தின் பிரதான மோதுகை யாது? (3 புள்ளி)
2) அன்ரிக்கனி இசுமனி ஆகிய பாத்திரங்களின் பண்புகளை உதாரணத்துடன் விளக்குக. (6 புள்ளி)
3) கிரையோன் அன்ரிக்கனி ஆகிய பாத்திரங்கள் மோதிக்கொள்ளும் சந்தர்ப்பங்களை நாடகபாட உதவியுடன் விளக்குக. (6 புள்ளி)

**2)**
1) நாடகத் தோற்றம் பற்றிய மூவரின் கருத்துக்கள் 3 தருக. (3 புள்ளி)
2) நாடகத்தின் சிறப்பியல்புகள் 5 குறிப்பிடுக. (4 புள்ளி)
3) சடங்கிலிருந்து நாடகம் வரையான வளர்ச்சிப் படிநிலை ரீதியாக கூறி உதாரணம் தந்து விளக்குக. (8 புள்ளி)

**3)**
1) பரதர் கூறும் நிருத்த நிருத்திய நாட்டிய நிலைகளை விளக்குக. (5 புள்ளி)
2) நாட்டியசாஸ்திரத்தில் கூறப்படும் இருவகை தர்மிகளைக் கூறி விளக்குக. (5 புள்ளி)
3) இந்திய அரங்கில் பேசப்படும் மார்க்க தேசிய வகைகளுக்கடையிலான வேறுபாட்டை விளக்குக. (5 புள்ளி)

### பிரிவு B

**4)**
1) அரங்கின் காண்பிய மூலகங்கள் 5 குறிப்பிடுக. (3 புள்ளி)
2) தயாரிப்பாளரின் பணிகள் 5 குறிப்பிடுக. (4 புள்ளி)
3) நெறியாளரது பணிகளைக் குறிப்பிட்டு விளக்குக. (8 புள்ளி)

**5)** பின்வரும் சடங்குகள் பற்றி சுருக்கி விளக்குக.
1) பாண்டவர் வனவாசம்.
2) உடக்குப் பாஸ்.
3) சொக்கரி.

(3 x 5 = 15 புள்ளி)

**6)** பின்வருவனவற்றில் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
1) பலே.
2) அரங்க விளையாட்டு.
3) தொலைக்காட்சி நாடகம்.
4) ஊமம்.
5) அபிநயம். (3 x 5 = 15 புள்ளி)